(ஆ) தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தைத் தனியாரிடம் ஒப்படைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. இந்த நிறுவனத்தைக் கூட்டுத் துறைக்கு மாற்றலாம் என்று மட்டுமே முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவை எதிர்த்து தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவன ஊழியர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு ஒன்றைத் தாக்கல் செய்து தடை உத்தரவினையும் பெற்றுள்ளார்கள்.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரியலூர் சிமெண்ட் ஆலை லாபத்தில் இயங்கிவருகிறது என்று சொன்னார்கள். கடந்த இரண்டு ஆண்டு காலமாக எவ்வளவு லாபத்தில் இயங்கி வருகிறது என்று பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் சிமெண்ட் ஆலை 1991 ஆம் ஆண்டு ரூ.150.90 லட்சமும், 1990-91 ஆம் ஆண்டு ரூ. 150.90 லட்சமும், 1992-93 ஆம் ஆண்டு ரூ. 73.19 லட்சமும் லாபம் ஈட்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 154, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

154—

திருப்பத்தூர் தொகுதியில் காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்தல்.

* **21765 -** திரு. ஏ .கே. சி. சுந்தரவேல்:

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1994 ஜனவரி 4

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரில் சாதாரண நெசவாளர் குடும்பத்தில் பிறந்த என்னை, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஆக்கி, கிழக்கு ஆசிய நாடுகளான மலேசியா, தாய்லாந்து, ஜப்பான், பாங்காக், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அனுப்பிவைத்த புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கனவிலும்கூட ஜப்பானை பார்ப்பேன் என்று நினைக்கவில்லை. ஆனால் அப்படி கனவிலும் நான் பார்க்காத ஜப்பானை நேரில் பார்க்கிற ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த என் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைக் கூறி கேள்வி கேட்க ஆரம்பிக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரில் எந்தவிதத் தொழிற்சாலையும் கிடையாது. திருப்பத்தூர் தொகுதியிலே ஜவ்வாது மலை, ஏலகிரி மலை இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே விவசாயமும், பீடி தொழிற்சாலைகளும் முக்கியத் தொழிலாக இருப்பதால், வேறு எந்தத் தொழிற்சாலையும் இல்லாத எங்கள் திருப்பத்தூர் தொகுதியில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், தேர்ந்தெடுக்கப்பட்ட மனையிடத்தில் ஒன்று, போதிய அளவிற்கு இடையறாத தண்ணீர் வேண்டும். இரண்டு, மரம், மூங்கில் காகித கூழ் போன்ற மூலப்பொருள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். மூன்று, மூலப்பொருள்கள் மற்றும் இரசாயனப் பொருள்களை எடுத்துச்செல்ல இயலும் வகையில் நெடுஞ்சாலைக்கு அருகில் இருக்க வேண்டும். நான்கு, நிலக்கரியினை எடுத்துச்செல்ல வரும்பொருட்டு ரெயில்வே தக்க இருப்புப் பாதை அமைத்துத் தர வேண்டும். ஐந்து, ஆலையில் இருந்து வெளிப்படும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு முறையான ஏற்பாடுகள் செய்துதரப்பட வேண்டும். ஆறு, சொந்த மின் உற்பத்தி செய்வதன்மூலம் தமிழ்நாடு மின்வாரிய மின் தொகுதி மூலம் மின்சக்தி வழங்குவதற்கு தங்களை உறுதி செய்யப்பட வேண்டும். இத்தகைய காரணங்கள் இருந்தால்தான் ஒரு காகித ஆலை அமைப்பதற்கு வழி இருக்கும். திருப்பத்தூர் பகுதியில் இந்த வாய்ப்புகள் இல்லை. எனவே, திருப்பத்தூர் தொகுதியில் காகித ஆலை நிறுவுவதற்கு சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 155, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.